**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை.**
**முன்னிலை: திரு.S. முகம்மது யூசுப் நவாஸ், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை.**

**2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 -ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**இடைக்கால மனு எண். 5/2025**
**இன்**
**அசல் வழக்கு எண். 122/2019**

மானாமதுரை அருள்மிகு
ஸ்ரீதர்மசாஸ்தா அறக்கட்டளையின்
மேனேஜிங் டிரஸ்டி
R. வடிவேலு மூலம். ...... மனுதார்/வாதி

/எதிர்/

1. தமிழக அரசு அதன் சிவகங்கை
   மாவட்ட ஆட்சியர் மூலம்.
2. சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம்
   அதன் மேலாளர் மூலம்
3. கண்காணிப்பாளர், சிவகங்கை சமஸ்தானம்
   தேவஸ்தானம், மானாமதுரை சரகம்.
4. வட்டாட்சியர் அவர்கள் மானாமதுரை. ......எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பு 09.04.2025 இன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P. ஆதிமூலம் அவர்கள் ஆஜராகியும், 1, 4ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.M.துரைப்பாண்டி அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியும், மனுதார் தரப்பு வாதம் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

**1.** மனுதாரர் தரப்பில் கட்டளை 6 ரூல். 17, 18 பிரிவு 151 உரிமையியல் விசாரணை சட்டத்தின்படி மனுவில் கண்ட விபரப்படி பிராதை சீர்திருத்தம் செய்ய அனுமதியளித்து வழக்கை மேல் நடத்த உத்தரவிட வேண்டும் என்று அபிடவிட் தாக்கல் செய்து இம்மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**2. மனு அபிடவிட்டின் சுருக்கம்:-**

தாவா சொத்துக்களை பொறுத்து அருள்மிகு ஸ்ரீதர்மசாஸ்தா அறக்கட்டளை சார்பில் பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் 4ம் எதிர்மனுதாரரான மானாமதுரை

வட்டாச்சியர் அவர்களை தரப்பினராக சேர்க்கக் கோரிய இடையீட்டு மனு எண்.4/2024 ஆனது கடந்த 01.03.2025ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் பிராதை திருத்தம் செய்ய அனுமதி வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4.** இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் இல்லை.

**5. இம்மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை: இம்மனு அனுமதிக்கத்தக்கதா/இல்லையா என்பதேயாகும்:-**

மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணம் ஏற்கத்தகுந்த நிலையில் உள்ளது. ஏற்கனவே இடையீட்டு மனு எண்.4/2024 அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் Consequential Amendment ஆன இம்மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

**மேற்கண்ட காரண காரியங்களின் அடிப்படையில் மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025-ம் ஆண்டு ஏப்ரல் 15 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.04.15 10:53:06 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.04.15 10:53:14 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை

**District Munsif Court**

**Manamadurai**

**IA.No. 5/2025**

**in**

**OS.No. 122/2019**

**<u>Order</u>**

**Dated 15.04.2025**